## ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் - 2016/2017

---

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டினதும் (''கம்பனி'') கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது. துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தொகுதியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயத்தை வலியுறுத்துதல்**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது தொகுதியானது ரூபா 28,339.51 மில்லியன் தேறிய நட்டத்தை அடைந்திருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு தொகுதியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 91,904.32 மில்லியனாலும் மொத்தப் பொறுப்புக்கள் அதன் மொத்தச் சொத்துக்களை ரூபா 107,793.52 மில்லியனாலும் விஞ்சியிருந்ததை சுட்டிக்காட்டுகின்ற ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 3 இன் மீது எனது கவனத்தை செலுத்தியுள்ளேன். குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டவாறு ஏனைய விடயங்களுடன் சேர்த்து இந் நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் குறிப்பு 3 இல் விபரிக்கப்பட்டவாறு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்தியங்குவதற்கான தொகுதியின் ஆற்றல் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு ஐயப்பாடு ஏற்படுதலானது பொருண்மையான நிச்சயமற்ற நிலைமை காணப்படுகின்றதை சுட்டிக்காட்டுகின்றது. 2016 திசெம்பர் 23 இல் திறைசேரிச் செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை அடிப்படையாகக்கொண்டு ‘‘தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு’’ ஒன்றாக கம்பனி அதன் செயற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனிக்கு இலங்கை அரசாங்கத்தின (ஜீஓஎஸ்எல்) உதவியை உறுதிப்படுத்தி 2017 யூலை 26 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியவாறு 2017 யூலை 18 இல் அமைச்சரவை அங்கீகாரத்துடன் சேர்த்து குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டவாறு தணிக்கும் காரணிகளை கணக்கிற்கு எடுக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு எடுகோளை பயன்படுத்தி இந் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இவ் விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படவில்லை.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கம்பனியினது தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சாதகமற்ற நிதி நிலைமை காரணமாக 2014 ஆம் ஆண்டில் 5.30 சதவீத வருடாந்த வட்டியில் ஐ.அ.டொலர் 175 மில்லியன் தொகையான சர்வதேச பிணைமுறிகளை கம்பனி வழங்கியிருந்ததுடன் 2019 யூன் வரை அரசாங்க உத்தரவாதமொன்றின் மூலம் முழுமையாக ஆதரவளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஐ.அ.டொலர் 150 மில்லியன் வங்கிக் கடன் வசதிகள் (ஏறத்தாழ ரூபா 22,725 மில்லியனிற்குச் சமமானது) மீளாய்வாண்டின் போது குறுங்காலக் கடனாக அரசாங்க வங்கிகளிடமிருந்து பெறப்பட்டிருந்தன.

**2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)**

நிதிக் கருவிகளை இணங்கண்டு அளவிடுதல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 39 இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியானது நட்டத்தைக் குறைக்கும் காசுப்பாய்ச்சல்களின் விபரமான எதிர்வுகூறல் ஒன்றை தயாரித்திருக்காததுடன் தற்போதைய அடிப்படை தொடர்பாக அதன் செயற்திறனை கண்காணித்திருக்கவில்லை. மேலும் முகாமைத்துவமானது நிதிக்கூற்றுக்களில் ஆண்டின் போது தேறிய மற்றும் தேறாத அந்நியச் செலாவணி இலாபங்கள்/ நட்டங்களாக அந்நியச் செலாவணி ஒதுக்கத்தில் ஏற்பட்ட அசைவுகளிற்கு பங்களிப்புச் செய்து பொருத்தமானவாறு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

உடன்படிக்கையின் பிரகாரம் 2016 செப்தெம்பர் தொடக்கம் 2017 பெப்ரவரி வரை குத்தகைக் கொடுப்பனவு தாமதத்திற்காக பாகிஸ்தான் இன்ரநஷனல் எயார்லைன்ஸிடமிருந்து ரூபா 6,153,073 வட்டியை கம்பனி அறவிட்டிருக்காததுடன் கம்பனி மேலதிக சேவைகளிற்கான விலைச்சிட்டைகளையும் சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுப் பேரேட்டின் பிரகாரம் ஆண்டிற்கான நிலப்பகுதி கையாளுதல் வருமானம் ரூபா 8,998,423,082 ஆக காணப்பட்டதுடன் பட்டியல்களின் பிரகாரம் இது ரூபா 8,989,331,409 ஆக இருந்தமையால் இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 9,091,673 வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) பொதுப் பேரேடு (Oracle) மற்றும் AuRA முறைமையிலுள்ள பொருளிருப்பு தொகுதிகளில் (Inventory module) காட்டப்பட்ட பொருளிருப்பு மீதியில் ரூபா 67,398,195 இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) பட்டியல் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களில் காட்டப்பட்ட பராமரிப்பு ஒதுக்க மீதியில் ரூபா 7,874,346 வேறுபாடொன்று காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 7.4.5 ஆம் பிரிவு | கம்பனியின் சொத்துக்களை சரிபார்ப்பதற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வினை கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ii) 9.2(ஈ) பிரிவு | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.3.1 (i) ஆம் பிரிவு | பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சினால் கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு திட்டம் (எஸ்ஓஆர்) அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கம்பனியானது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 12,622 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 28,930 மில்லியன் தேறிய நட்டத்தை விளைவித்திருந்ததால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 16,308 மில்லியன் முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்கான ரூபா 14,362.81 மில்லியன் (ஐ.அ.டொலர் 98 மில்லியன்) மூன்று ஏ350-900 விமான குத்தகை உடன்படிக்கை கிரயம் இரத்துச் செய்தல் கட்டணக் கொடுப்பனவு இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக உள்ளது.

2012/13 தொடக்கம் 2016/17 வரை கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2016/2017 | 2015/2016 | 2014/2015 | 2013/2014 | 2012/2013 |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரிக்குப் பின்னரான இலாபம் / (நட்டம்) | (28,929.99) | (12,621.69) | (16,494.66) | (32,408.34) | (26,088.57) |
| **சேர்த்தல் :-** | | | | | |
| ஊழியர் சம்பளம் (விமானப் பணியாளர் கிரயம் தவிர) | 18,797.05 | 10,693.32 | 9,213.90 | 8,352.93 | 7,938.49 |
| **அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி** | | | | | |
| ஈஎஸ்சீ மற்றும் என்பீரீ | | | | | லிலக்களிக்கப்பட்டுள்ளது |
| வற் | - | 61.14 | 103.88 | 74.63 | 76.21 |
| முத்திரைத் தீர்வை | - | 2.19 | 0.84 | 23.23 | இல்லை |
| ஏனைய தீர்வைகள் - என்ஆர் வரி | - | 20.23 | 12.56 | இல்லை | இல்லை |
| எயார்போட் ஏவியேஷனிற்கான உரிமைக் கட்டணங்கள் (Franchise fees) | 383.59 | | | | |
| வட்டியாக முலதன வழங்குனர்கள் | (6,922.92) | | | | |
| பெறுமானத்தேய்வு | 2,041.63 | 2,683.91 | 2,275.98 | 1,602.79 | 1,187.02 |
| **மொத்தம்** | **(14,630.64)** | **839.11** | **(4,887.51)** | **(22,354.76)** | **(16,886.85)** |

வரிக்குப் பினனரான நட்டம் அதிகரித்தமை காரணமாக கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை மீளாய்வாண்டின் போது ரூபா 15,469.75 மில்லியனால் குறைவடைந்திருந்தது. விமான குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதற்கான இழப்பீடு ரூபா 11,801.26 மில்லியனால் அதிகரித்ததன் விளைவாக மீளாய்வாண்டின் போது வரிக்குப் பின்னரான நட்டம் ரூபா 16,308.3 மில்லியனால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016/2017 | 2015/2016 | 2014/2015 | 2013/2014 | 2012/2013 |
|---|---|---|---|---|---|
| நடைமுறை பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.21 | 0.27 | 0.48 | 0.42 | 0.77 |
| வருமானத்திற்கான தேறிய நட்ட விகிதம் | 21 | 09 | 13 | 27 | 22 |
| வருமான அதிகரிப்பு/ (குறைவு) (%) | 4.6 | (02) | 09 | 02 | 29 |
| ஒட்டுமொத்த வருமானம் (தொண் கிலோமீற்றர் வருமானத்திற்கான தேறிய போக்குவரத்து வருமானம்) | 80.08 | 79.06 | 80.32 | 77.26 | 74.31 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ரூபா) | | | | | |
| அலகுக் கிரயம் (ரூபா) | 64.79 | 59.72 | 61.88 | 64.96 | 64.68 |
| இலாபநட்டமற்ற ஏற்றல் காரணி (%) | 80.91 | 75.54 | 77.03 | 84.07 | 87.03 |
| பிரயாணி கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானம் (ரூபா) | 8.4 | 8.2 | 8.2 | 7.8 | 7.6 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் நடைமுறை பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் கம்பனியின் நலிவான தொழிற்படு மூலதனத்தை சுட்டிக்காட்டி தொடர்ச்சியாக ஒன்றை விடக் குறைவாக காணப்படுகின்றது.

(ஆ) வருமானத்திற்கான தேறிய நட்ட விகிதம் 2013/2014 தொடக்கம் 2015/2016 வரை குறைவடைந்திருந்த போதிலும் இது மீளாய்வாண்டின் போது 12 சதவீத அதிகரிப்பை சுட்டிக்காட்டி மாற்றமடைந்திருந்தது.

(இ) 2012/2013 தொடக்கம் 2014/2015 வரை ஒட்டுமொத்த வருமானம் அதிகரித்திருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 1.02 (தொண் கிலோமீற்றர் வருமானத்திற்கான தேறிய போக்குவரத்து வருமானம் - ரூபா) ஆல் அதிகரித்திருந்தது.

(ஈ) அலகுக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 5.07 ஆக அதிகரித்திருந்தது.

## 4. முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகாரங்கள் மற்றும் உத்தரவாதங்கள் பெறப்படாமல் இரு தரப்பினர்களிற்கு கடன் வசதிகளை கம்பனி வழங்கியிருந்தது. மேலும் சில கடன்பட்டோர் நிலுவை மீதிகள் வாடிக்கையாளர்களால் செலுத்த தவறுகின்ற நிகழ்வின் போது கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட இயலாத தன்மைக்கு வழிவகுத்து வங்கி உத்தரவாத எல்லைகளை விஞ்சியிருந்தது.

(ஆ) சிக்கல்களை தவிப்பதற்காக கால அடிப்படையில் வெளிநாட்டு நிலையங்களின் உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) கம்பனி விமானங்களின் பிரதான பராமரிப்புக் கிரய கணிப்பீட்டிற்காக கொள்கைக் கட்டமைப்பு வேலையை ஆவணப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) திருப்பி அனுப்பல் செலவு தொடர்பாக ஏறத்தாழ ரூபா 70 மில்லியன் தேறிய பெறுமதியான செலவொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. இச் செலவினம் பரீட்சிப்பில் உள்ள பதவியணியினரின் முறையற்ற நிர்வாகம் காரணமாக ஏற்பட்ட கட்டுப்படுத்தக்கூடிய கிரயத்தை உள்ளடக்கியிருந்ததுடன் இதன் விளைவாக பிரயாண ஆவணங்களிலுள்ள பல்வேறு குறைபாடுகள் காரணமாக பிரயாணம் செய்யும் நாட்டின் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு பிரயாணிகள் திருப்பியனுப்பப்பட வேண்டியிருந்தனர்.

(உ) ரூபா 19,097,367 தொகையான பொருளிருப்பு விடயங்களின் தவறான வகைப்படுத்தல் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக மீள வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அங்கீகாரம் பெறப்படாமலும் நிதிப் பிரிவின் ஒருங்கிணைப்பின்றியும் ரூபா 1,529,966 தொகை நேர்மாறாக மீள

வகைப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை கொள்வனவு செய்வதன் சாதாரண அங்கீகார செயன்முறை மீறப்பட முடியாதிருந்ததுடன் பெறுமானத்தேய்வு அறவீடுகள் குறைத்து/ அதிகரித்துப் பெறுமதியிடப்பட முடிந்திருந்தது.

(ஊ) கம்பனியானது மெதுவாக அசையும் மற்றும் பழுதடைந்த இருப்பு மட்டங்களை காலரீதியாக மீளாய்வு செய்து போதியளவு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக முறையான கொள்கையொன்றை முன்வைத்திருக்கவில்லை. குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை கழித்ததன் பின்னர் ஒரு சதவீதத்தை பொது ஏற்பாட்டிற்காக மேற்கொண்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது கொள்கைப் பத்திரம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படக்கூடிய உருப்படிக்காக 20.9 சதவீதம் மற்றும் பொதுவான பொருளிருப்பிற்காக 16 சதவீதம் என்பவற்றிற்குச் சமமானதாக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

அமைப்பு அகவிதியின் பிரகாரம் கம்பனியின் நோக்கங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

(அ) பயணிகள் போக்குவரத்திற்காக சர்வதேச பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத விமானச் சேவைகள், இலங்கையின் பெயரில் எடுத்துச் செல்பவராக கேழ்வு மற்றும் தபால் சேவைகளை செயற்படுத்துதல்.

(ஆ) பண்டாரநாக்கா சர்வதேச விமான நிலையத்திலும் (பீஐஏ) மத்தல ராஜபக்ஷ சர்வதே விமான நிலையத்திலும் (எம்ஆர்ஐஏ) விமான முடிவிட சேவைகளை வழங்குதல்.

(இ) விமானங்களில் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல்.

(ஈ) ஏனைய பிரதான செயற்பாடுகளுடன் இணைந்ததாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுமுறைப் பொதிகளை சந்தைப்படுத்துதல்.

(உ) மூன்றாம் தரப்பு விமானப் பராமரிப்பை வழங்குதல்.

(ஊ) விமானப் பயண தொழிற்பாட்டு சேவைகளை வழங்குதல்.

(எ) கம்பனியின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை மேற்கொள்ளும் விமானச் சேவை பயிற்சிகளை நடாத்துதல்

**5.2** கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான கம்பனியின் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (கேபிஐ'எஸ்) பின்வருமாறு உள்ளன.

| கேபிஐ | 2016/2017 | 2015/2016 | 2014/2015 | 2013/2014 | 2012/2013 |
|---|---|---|---|---|---|
| பிரயாணிகள் இயலளவு (ஏஎஸ்கே மில்லியன்) | 15,608.10 | 15,790.28 | 16,180.27 | 15,780.54 | 15,944.31 |
| கொண்டுசெல்லப்படும் பிரயாணிகள் (ஆர்பிகே - மில்லியன்) | 12,455.05 | 12,727.66 | 12,963.71 | 12,810.95 | 12,968.74 |
| பிரயாணி ஏற்றல் காரணி (%) | 79.80 | 80.60 | 80.12 | 81.18 | 81.34 |
| ஒட்டுமொத்த இயலளவு (ஏரீகே மில்லியன்) | 2,167.92 | 2,165.21 | 2,224.87 | 2,187.18 | 2,186.96 |
| எடுத்துச்செல்லப்பட்ட | 1,475.29 | 1,484.77 | 1,519.93 | 1,466.74 | 1,513.70 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒட்டுமொத்த ஏற்றல்கள் (ஆர்ரீகே மில்லியன்) | | | | | |
| ஒட்டுமொத்த ஏற்றல் காரணி (%) | 68.05 | 68.57 | 68.32 | 67.06 | 69.22 |
| எடுத்துச்செல்லப்பட்ட பிரயாணிகள் (எண்ணிக்கைகள் ஆயிரங்களில்) | 4,446 | 4,328 | 4,348 | 4,175 | 4,255 |
| எடுத்துச்செல்லப்பட்ட பொருட்கள் (தொண்கள்) | 116,221 | 102,082 | 101,878 | 94,410 | 101,100 |
| ஆண்டிறுதியில் சேவையிலுள்ள விமானங்கள் | 24 | 21 | 21 | 21 | 22 |
| விமானங்களின் பயன்பாடு (நாளொன்றுக்கான பீஎல்கே மணித்தியாலங்கள்) | 12.44 | 12.02 | 12.90 | 12.76 | 12.82 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரயாணிகள் இயலளவு மற்றும் கொண்டுசெல்லப்படும் பிரயாணிகள் மீளாய்வாண்டின் போது முறையே 182.18 ஏஎஸ்கே மில்லியன் மற்றும் 272.61 ஆர்பிகே மில்லியனால் குறைவடைந்திருந்தன. பிரயாணிகள் ஏற்றல் காரணி 0.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்த இயலளவு 2.71 ஏரீகே மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் எடுத்துச் செல்லப்பட்ட ஒட்டுமொத்த ஏற்றல் 9.48 ஆர்ரீகே மில்லியனால் குறைவடைந்திருந்த போதிலும் ஒட்டுமொத்த ஏற்றல் காரணி 0.52 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சேவையிலுள்ள விமானங்கள் 3 ஆல் அதிகரித்திருந்ததுடன் விமானப் பயன்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 0.42 (நாளொன்றிற்கு பீஎல்கே மணித்தியாலம்) ஆல் அதிகரித்திருந்தது.

(ஈ) குறைவான சந்தர்ப்பங்களில் வரைவு விமான அட்டவணை மற்றும் உள்ளபடியான செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் ஆவணப்படுத்தப்படாததன் காரணமாக தாமதங்களிற்கான காரணங்கள் மதிப்பிடப்பட முடியாதிருந்தன.

## 5.3 எயார் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம் பிரயாணிகள் மற்றும் சரக்குச் சேவைகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சேவைகள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகளை மேற்கொள்வதற்காக கம்பனியின் துணைக் கம்பனியொன்றாக 2003 ஆம் ஆண்டில் எயார் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் கூட்டிணைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எயார் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டால் எந்தவொரு வர்த்தக செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எயார் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 மற்றும் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 சனவரி 19 இல் கணக்காய்விற்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) தலைவரின் பதிலின் பிரகாரம் இத் துணைக் கம்பயினை தொடந்து இயக்கிச் செல்வதற்கான நோக்கம் எயார் லங்காவின் பெயரை பாதுகாப்பதற்காக உள்ளது.

### 5.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று ஏ – 350 விமானங்களுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு ரூபா 14,362.81 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2016/2017 இன் மூன்றாம் காலாண்டின் போது ஒப்படைப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்த மூன்று ஏ-350 விமானங்களை இரத்துச் செய்வதற்கு குத்தகைதாரர் ஒருவருடன் 2016 ஒக்தோபர் 04 ஆம் திகதி கம்பனி முடிவுறுத்தல் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. இதன் விளைவாக, 2016 ஒக்தோபர் முதல் 2017 யூன் வரை தவணைக்கட்டணங்களாக ஐ.அ.டொலர் 90.5 மில்லியனை கம்பனி செலுத்த வேண்டியிருந்ததுடன் விமானங்களிற்காக ஏற்கனவே செலுத்தியிருந்த ஐ.அ.டொலர் 7.5 மில்லியன் தொகையான பாதுகாப்பு வைப்பு அறவிடப்பட முடியாதிருந்தமையை கணக்காய்வு வெளிப்படுத்தியிருந்தது.

(இ) ரூபா 1,860,917 பெறுமதியான பொருளிருப்புக்கள் காணாமல் போயிருந்ததுடன் கணக்குகளில் மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ் உருப்படிகள் வெற் குத்தகை (wet lease) உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட விமானங்களின் பராமரிப்புச் செயற்பாடுகளிற்காக பாகிஸ்தான் இன்ரநஷனல் எயார் வேய்ஸிற்கு (Parkistan International Air ways) வழங்கப்பட்ட பின்னர் இழக்கப்பட்டிருந்தன. மேலும் கம்பனி பிரதான பண்டகசாலையிலிருந்து வெளியே வழங்கப்பட்டிருந்த பொருளிருப்புக்களை ஆவணப்படுத்துவதற்காக முறையான நடைமுறையொன்றை அமுல்ப்படுத்தியிருக்கவில்லை.

### 5.5 மனிதவள முகாமைத்துவம்

-------------------------------------------------

2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் சபை அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான பதவியணியினர் நிலைமை கீழே தரப்பட்டுள்ளன.

| சேவை வகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | பதவியணியினர் மிகை/ வெற்றிடம் |
|---|---:|---:|---:|
| நிறைவேற்றுநர்கள் | 1,365 | 1,299 | 66 |
| மேற்பார்வையாளர்கள்/ தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்/ விற்பனையாளர் | 1,297 | 1,224 | 73 |
| எழுதுநர் மற்றும் இணைந்தவை | 2,152 | 1,998 | 154 |
| பயிற்சிபெற்ற மற்றும் பகுதியளவிலான பயிற்சிபெற்ற ஊழியர்கள் | 1,737 | 1,620 | 117 |
| கீழ்நிலை ஊழியர்கள் மற்றும் பயிற்சிபெறாதவர்கள் | 911 | 844 | 67 |
| பயிலுநர்கள் | 75 | 36 | 39 |
| **மொத்தம்** | **7,537** | **7,021** | **516** |

(அ) பதவியணி செயலாற்றல் தொடர்பான முக்கிய சில தரவுகள் மற்றும் விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2016/2017 | 2015/2016 | 2014/2015 | 2013/2014 | 2012/2013 |
|---|---|---|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 7,021 | 6,959 | 6,987 | 6,578 | 6,359 |
| ஊழியர் ஒருவருக்கான வருமானம் (ரூபா) | 19,294,059 | 18,606,181 | 18,881,084 | 18,483,708 | 18,803,412 |
| ஊழியர் ஒருவருக்கான இயலளவு (தொண்-கி.மீ) | 308,776 | 311,139 | 318,430 | 332,499 | 343,916 |
| ஊழியர் ஒருவருக்கான எடுத்துச் செல்லப்பட்ட ஏற்றல் (தொண்-கி.மீ) | 210,126 | 213,359 | 217,537 | 222,976 | 238,041 |

(i) கடந்த ஐந்து ஆண்டுகளின் போது சராசரிப் பதவியணியினர் பலம் படிப்படியாக அதிகரித்திருந்தது.

(ii) 2012/2013 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை ஊழியர் ஒருவரிற்கான இயலளவு மற்றும் எடுத்துச் செல்லப்பட்ட ஏற்றல் படிப்படியாக குறைவடைந்திருந்தது.

**(ஆ) பதவியணியினருக்கு வழங்கப்பட்ட சலுகை விமானச் சீட்டுக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது சலுகை அடிப்படையில் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்ட விமானச் சீட்டுக்களின் கிரயம் தொடர்பான விபரங்கள் பல தடவைகள் கணக்காய்வு கோரியிருந்த போதிலும் அவை கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) ரூபா 12,293,324 பெறுமதியான பன்னிரண்டாயிரத்து அறுநூற்று ஏழு (12,607) சலுகை விமானச் சீட்டுக்கள் மீளாய்வாண்டின் போது கம்பனியின் இரண்டாயிரத்து தொளாயிரத்து மூன்று (2,903) ஊழியர்களிற்கு சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | மனித வள முகாமைத்துவம் | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பன முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) பொருள் மெய்மையாய்வு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) இருப்பு அசைவுகளிற்கான பலவீனமான செயன்முறைகள். |
| | | (iii) இருப்புத் தொகுதிகள் (Inventory modules) கால அடிப்படையில் |

நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | தகவல் தொழில்நுட்பம் | (i) | பொறியியல் பிரிவிலுள்ள பொருளிருப்பு உருப்படிகளின் தசம எண்ணிக்கைளை உள்ளடக்குவதற்கான மட்டுப்பாடு. |
| | | (ii) | தரைப் பகுதி கையாளல் முறைமை விரைவான முறைமையுடன் இணைக்கப்படாமை. |